Sword of the Spirit

எரேமியாவின் புலம்பல்

Sword of the Spirit

புத்தகத்தின் சுருக்கம்

Sword of the Spirit

- எபிரேய மொழியில் புத்தகத்தின் பெயர் :: ஏகா, אֵיכָה, 'Êykhôh, தமிழில் :: “ஐயோ!” / “எப்படி” என்ற பொருளில் ஏதோ ஒரு சோகமான நிகழ்வைப் பற்றி அழுகிற அல்லது புலம்புகிற உணர்வைக் குறிக்கிறது.
- “புலம்பல்கள்” என்ற தலைப்பில் அதன் தெளிவான மற்றும் வெளிப்படையான அர்த்தத்தின் காரணமாக புத்தகத்தின் பெயர் அமைக்கப்பட்டது.
- விவிலிய ஏட்டுப் பழைய ஏற்பாட்டின் கிரேக்க வடிவத்தில், இந்த புத்தகத்திற்கு Θρήνοι - திரெனோய் - என்று பெயரிடப்பட்டு எரேமியாவைத் தொடர்ந்து தீர்க்கதரிசன புத்தகங்களில் வைக்கப்பட்டது.
- துன்பத்திற்கும் இரட்சிப்பிற்குரியதுமான இறையியல் வளங்களை இப்புத்தகத்தின் மூலம் அறியலாம்.

Sword of the Spirit

....

- கிமு 587 இல் பாபிலோனியர்களால் எருசலேம் நகரம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து , எருசலேம் மற்றும் அதின் ஜனங்களின் அவமானம், துன்பம் மற்றும் விரக்தியை புலம்பல் புத்தகம் வெளிப்படுத்துகிறது.
- தீர்க்கதரிசியாகிய எரேமியா , எருசலேமின் அழிவையும், ஜனங்களின் சிறையிருப்பையும் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார்.(எரே.38 :22,23)
- எருசலேமின் அழிவின் முடிவுகளை புத்தகத்தின் ஆசிரியர்(எரேமியா) கண்டது மட்டுமல்லாமல், அவர் பாபிலோனிய படையெடுப்பைக் கண்டதையும் இங்கு காணலாம்.(புலம்பல் 1: 13–15).
- இறுதியாக, கர்த்தர் ஒரு நாள் தாம் தெரிந்துகொண்ட ஜனத்தை விடுதலை செய்வார் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடும் இந்த புத்தகத்தில் உள்ளது.

Sword of the Spirit

....

- இந்த புத்தகத்தின் மையத்தில் (புலம்பல் 3: 22-25) ,சுற்றியுள்ள இருளின் நடுவே வலுவாக நிற்கும் இந்த விசுவாச அறிக்கை, தங்கள் பாவம் மற்றும் கீழ்ப்படியாமையின் விளைவுகளின் கீழ் துன்பப்படுபவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக பிரகாசிக்கிறது.

- புலம்பல்கள் கர்த்தருடைய பண்டிகைகளின் போது (லேவி. 23) அல்லது யூத நினைவு விடுமுறை நாட்களில் படிக்கப்படுகிறது. எருசலேம் மற்றும் சாலொமோனின் கர்த்தருடைய ஆலயம் (2 இரா 25: 8-9, எரே 52: 12-23), மற்றும் இரண்டாவது ஆலயம் (கி.பி 70 ரோமானியர்) ஆகியவற்றின் அழிவை நினைவுகூரும் விதமாக இப்புத்தகம் படிக்கப்படுகிறது.

Sword of the Spirit

புத்தகத்தின் அமைப்பு

Sword of the Spirit

- எரேமியாவின் புலம்பல் புத்தகம் ஒரு கவிதை நடையைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.அதை ஆங்கிலத்தில் அக்ரோஸ்டிக்ஸ் (Acrostrics) என்று அழைக்கின்றனர்.
- புத்தகத்தில் 66 வசனங்களைக் கொண்ட 3 ஆம் அதிகாரத்தைத் தவிர, தலா 22 வசனங்களுடனான ஐந்து அதிகாரங்கள் உள்ளன.
- முதல் நான்கு அதிகாரங்களின் ஒவ்வொரு வசனமும் எபிரேய எழுத்துக்களின் அடுத்தடுத்த எழுத்துக்களுடன் தொடங்குகிறது.
- 3 ஆம் அதிகாரம், ஒவ்வொரு எழுத்துக்கும் மூன்று வரிகளைக் கொண்டுள்ளது.

Sword of the Spirit

எபிரேய எழுத்துக்களின் வரிசையை முதலெழுத்தாகக் கொண்ட புலம்பல் புத்தகத்தின் அமைப்பு

அதி .1	அதி. 2	அதி. 3	அதி. 4	அதி. 5
22, 3 வரிகளுடைய வசனங்கள்	22, 3 வரிகளுடைய வசனங்கள்	66, 3 வரிகளுடைய வசனங்கள்	22, 3வரிகளுடைய வசனங்கள்	22 வசனங்கள் (முதலெழுத்து எபிரெய எழுத்தின் வரிசையல்ல)
א, ஆலெப்…. …. ….	א, ஆலெப்…. …. ….	א, ஆலெப்…. א, ஆலெப்…. א, ஆலெப்….	א, ஆலெப்…. …. ….	…. …. ….
ב, பேத்…. …. ….	ב, பேத்…. …. ….	ב, பேத்…. ב, பேத்…. ב, பேத்….	ב, பேத்…. …. ….	…. …. ….
ג, கிமெல்…. …. ….	ג, கிமெல்……. ….	ג, கிமெல்…. ג, கிமெல்…. ג, கிமெல்….	ג, கிமெல்…. …. ….	…. …. ….

Sword of the Spirit

(அக்ரோஸ்டிக்ஸ்)

1: אֵיכָה | יָשְׁבָה בָדָד הָעִיר

எபிரெய எழுத்துக்களின் முதல் எழுத்து

2 בָּכוֹ תִבְכֶּה בַּלַּיְלָה וְדִמְ

இரண்டாம் எழுத்து

3 גָּלְתָה יְהוּדָה מֵעֹנִי וּמֵרֹ

மூன்றாம் எழுத்து

Sword of the Spirit

புத்தகத்தின் கருப்பொருள்

Sword of the Spirit

- ★ யூதாவின் பாவத்திற்கு பதிலளிக்கும் விதமாக ஆண்டவரின் நியாயத்தீர்ப்பு.
- ★ கர்த்தர் இரக்கமுள்ளவர் என்பதில் நம்பிக்கை.
- ★ நீதியான தேவனின் நியாயமான தீர்ப்பு.
- ★ பாவங்களுக்கும் ,அக்கிரமங்களுக்கும் ஏற்ற தண்டனை என்பதை ஒப்புக்கொள்ளுதல் .
- ★ எரேமியாவின் அழுகை ,மன்றாட்டு கிறிஸ்துவுடன் தொடர்புடையது. (மத்.23:37 - 39)
- ★ இந்த புத்தகத்தைப் படிக்கின்ற அனைவருக்கும் எச்சரிக்கை.

Sword of the Spirit
Sword of the Spirit

புத்தகத்தின் விவரம்

Sword of the Spirit

5 அதிகாரங்கள்

அதிகாரம் 1
எருசலேமின்
அழிவு

அதிகாரம் 2
ஆண்டவரின்
கோபம்

அதிகாரம் 3
எரேமியாவின்
துயரம்

அதிகாரம் 4
சீயோனுக்கு
ஐயோ!!

அதிகாரம் 5
மீட்பப்படுவதற்கான
நம்பிக்கை

Sword of the Spirit

அதிகாரம் 1. எருசலேமுக்கு ஏன் இவ்வளவாய் துக்கம்?????

- ★ ஐயோ! ஜனம்பெருத்த நகரி தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே! விதவைக்கு ஒப்பானாளே! ஜாதிகளில் பெரியவளும், சீமைகளில் நாயகியுமாயிருந்தவள் கப்பங்கட்டுகிறவளானாளே!(1)
- ★ அவளுடைய திரளான பாதகங்களினிமித்தம் கர்த்தர் அவளைச் சஞ்சலப்படுத்தினார்; அவள் பிள்ளைகள் சத்துருவுக்கு முன்பாகச் சிறைப்பட்டுப்போனார்கள்.(5)
- ★ எருசலேம் மிகுதியாய்ப் பாவஞ்செய்தாள்;,,,,,,அவளைக் கனம்பண்ணினவர்கள் எல்லாரும் அவளை அசட்டைபண்ணுகிறார்கள்.(8)
- ★ என் பாதகங்களின் நுகம் அவருடைய கையால் பூட்டப்பட்டிருக்கிறது; அவைகள் பிணைக்கப்பட்டு என் கழுத்தைச் சுற்றிக்கொண்டது; என் பெலனை விழப்பண்ணினார்; நான் எழுந்திருக்கக் கூடாதபடிக்கு ஆண்டவர் என்னை ஒடுக்குகிறவர்களின் கையில் ஒப்புக்கொடுத்தார்.(14)

Sword of the Spirit

அதிகாரம் 2. ஆண்டவர் எருசலேமுக்கு விரோதமாய் எழும்பினார்

- ★ ஐயோ! ....இஸ்ரவேலின் மகிமையை வானத்திலிருந்து தரையிலே விழத்தள்ளினார்.(1)
- ★ ஆண்டவர் தப்பவிடாமல் யாக்கோபின் வாசஸ்தலங்களையெல்லாம் விழுங்கினார்; அவர் யூதா குமாரத்தியின் அரண்களையெல்லாம் தமது சினத்திலே இடித்து, தரையோடே தரையாக்கிப்போட்டார்...(2)
- ★ ஆண்டவர் பகைஞன்போலானார்; இஸ்ரவேலை விழுங்கினார்...(5)
- ★ ஆண்டவர் தமது பலிபீடத்தை ஒழித்துவிட்டார்; தமது பரிசுத்த ஸ்தலத்தை வெறுத்துவிட்டார்....(7)
- ★ கர்த்தர் சீயோன் குமாரத்தியின் அலங்கத்தை நிர்மூலமாக்க நினைத்தார்; நூலைப்போட்டார்....(8)

Sword of the Spirit

…………………

★ தீர்க்கதரிசிகள் செய்யத் தவறியது என்ன???

- உன் தீர்க்கதரிசிகள் அபத்தமும் வியர்த்தமுமான தரிசனங்களை உனக்காகத் தரிசித்தார்கள்;
- அவர்கள் **உன் சிறையிருப்பை விலக்கும்படி உன் அக்கிரமத்தை எடுத்துக்காட்டாமல்**, அபத்தமானவைகளையும் கேடானவைகளையும் உனக்காக தரிசித்தார்கள்.(14)

★ விளைவு

- வழிப்போக்கர் யாவரும் உன்பேரில் கை கொட்டுகிறார்கள்….(15)
- உன் பகைஞர் எல்லாரும் உன்பேரில் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்; …… நாம் காத்திருந்த நாள் இதுவே, இப்பொழுது நமக்குக் கிடைத்தது, அதைக் கண்டோம் என்கிறார்கள்.(16)

Sword of the Spirit

....

★ ஜனங்கள் செய்ய வேண்டியது என்ன???

- ......சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்புவிழியை சும்மாயிருக்க வொட்டாதே.(18)
- எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு; எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப்போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு.(19)

Sword of the Spirit

அதிகாரம் 3. சிறுமையைக் கண்ட புருஷன்

★ அவர் என்னை வெளிச்சத்திலே அல்ல, இருளிலே அழைத்து நடத்திவந்தார்.(2)

★ அவர் தமது கையை எனக்கு விரோதமாகவே நித்தமும் திருப்பினார்.(3)

★ நான் புறப்படக்கூடாதபடி என்னைச் சூழ வேலியடைத்தார்; என் விலங்கைப் பாரமாக்கினார்.(7)

★ நான் சத்தமிட்டுக் கூப்பிட்டாலும், என் ஜெபத்துக்கு வழியை அடைத்துப்போட்டார்.(8)

★ கசப்பினால் என்னை நிரப்பி, எட்டியினால் என்னை வெறிக்கச்செய்தார்.(15)

Sword of the Spirit

Sword of the Spirit

....

★ எரேமியாவின் புலம்பலில் மிக முக்கியமான வசனங்கள்

22. நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே,
அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.

23. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை
பெரிதாயிருக்கிறது.

24. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்;
ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கைகொண்டிருப்பேன்.

25. தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற
ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர்.

Sword of the Spirit

....

- ★ எரேமியாவின் நம்பிக்கை.(21 - 38)
  - ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார்.(31)
  - அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார்.(32)
  - அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை.(33)
- ★ எரேமியாவின் விண்ணப்பம்.(39 - 66)
  - என் ஜனமாகிய குமாரத்தி அடைந்த கேட்டினிமித்தம் என் கண்களிலிருந்து நீர்க்கால்கள் பாய்கிறது.(48)
  - நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி: பயப்படாதே என்றீர்.(57) ஆண்டவரே, என் ஆத்துமாவின் வழக்கை நடத்தினீர்; என் பிராணனை மீட்டுக்கொண்டீர்.(58)
  - கர்த்தாவே, எனக்கு உண்டான அநியாயத்தைக் கண்டீர்; என் நியாயத்தைத் தீரும்.(59)

அதிகாரம் 4. கர்த்தர் சீயோனில் அக்கினியைக் கொளுத்தினார்

- ★ சிறைபடுத்தப்பட்ட வாழ்க்கையின் கொடூரத்தை மீண்டும் கூறுகிறது.(1 - 12)
- ★ **தீர்க்கதரிசிகள் மற்றும் ஆசாரியர்களின் பாவங்கள்:**(13,14)

  நீதிமான்களின் இரத்தத்தைச் சிந்தின அதின் தீர்க்கதரிசிகளின் பாவங்களினாலும், அதின் ஆசாரியர்களின் அக்கிரமங்களினாலும் இப்படி வந்தது.(13)
- ★ கர்த்தரை சார்ந்திருக்கவில்லை.(16 - 20)
- ★ ஏதோமின் அக்கிரமம் விசாரிக்கப்படும்.(21,22)

Sword of the Spirit
Sword of the Spirit

அதிகாரம் 5. கர்த்தாவே எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும்

★ கர்த்தர் தங்களை நினைவுகூரவேண்டும் என்று விண்ணப்பம்.(1 - 18)

- கர்த்தாவே, எங்களுக்கு நேரிட்டதை நினைத்தருளும்; எங்கள் நிந்தையை நோக்கிப்பாரும்.(1)
- திக்கற்றவர்களானோம், தகப்பன் இல்லை; எங்கள் தாய்கள் விதவைகளைப்போல இருக்கிறார்கள்.(3)

★ கர்த்தர் தங்களை மீட்டெடுக்கவேண்டும் என்று விண்ணப்பம்.(19 - 22)

- கர்த்தாவே, நீர் என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய சிங்காசனம் தலைமுறை தலைமுறையாக நிலைநிற்கும்.(19)
- கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம்; பூர்வகாலத்திலிருந்ததுபோல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும்.(21)

Sword of the Spirit

Reference :

1. பரிசுத்த வேதாகமம் (தமிழ்)
2. oxfordbibliographies.com
3. insight.org, Chuck Swindoll’s overview of Lamentations
4. The alphabetic acrostic in the Book of Lamentations www.researchgate.net
5. biblescripture.net
6. Bible-studys.org
7. slideshare.net/lamentations-presentations
8. Wordpress.com, Stephen.D.Campbell
9. gty.org,John MacArthur on Lamentations

Sword of the Spirit

Sword of the Spirit

Sword of the Spirit
தேவனுக்கே
மகிமை
ஆமென்
Sword of the Spirit